# பழந்தமிழரின் அறச்சிந்தனையும் போர் முறையில் அறிவியலும்

23

**க. ஜான்சி ராணி[1] & முனைவர் க. அமலா கார்த்திகா [2]**
**[1]முனைவர் பட்ட ஆய்வாளர்**
**[2]உதவிப் பேராசிரியர்,**
**தமிழ்த்துறை, கலை மற்றும் மானுட அறிவியல், மீனாட்சி உயர்கல்வி மற்றும் ஆராய்ச்சி நிறுவனம், நிகர்நிலைப் பல்கலைக் கழகம், சென்னை -78.**
jancy_res@maher.ac.in, gamalakarthiga@maherfhs.ac.in

**ஆய்வுச்சுருக்கம்**

பழந்தமிழர் அறிவியல் போர்த்திறன்களைச் சங்க இலக்கியங்களில் பொதிந்து வைத்துள்ளனர். இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்னர் சங்ககாலப் புலவர்கள் கூறியுள்ள அறிவியல் உண்மைகள், இன்றைய அறிவியலாளர் கண்டு கூறுவதை அறியலாம். அதே போல் தமிழ் இலக்கியங்களில் காணப்படும் அறசிந்தனையும், அதில் நடக்கும் போர் முறை அறிவியலும், அக, புற உலக வாழ்க்கையையும் தெளிவுற எடுத்துக்காட்டும் காலக்கண்ணாடியாகச் சங்க இலக்கியங்கள் அமைந்துள்ளன. குறிப்பாக அறவாழ்வையும், போரையும் அதில் நடக்கும் வெற்றியும், தோல்வியும் வெளிப்படுத்தும் விதமாக இவ்வாய்வு அமைகின்றது.

**திறவுச்சொற்கள்:** அரசியலறம், அறிவியல் செய்தி, நல்லறம், வீரம், கருவிகளின் பெருமை, அறச்சிந்தனை

**முன்னுரை**

மனித நாகரிகம் தொடங்கிய காலத்திலிருந்தே போர்கள் நிகழ்ந்திருப்பதைச் சங்க இலக்கியம் எடுத்துரைக்கின்றன. அதில் உடல் ரீதியாகவும், மன ரீதியாகவும், நம்பிக்கைக்காவும் நடந்த போர்கள் அதிகம். போட்டியும், போர்க்குணமும், உள்ளுக்குள் ஊற்றெடுக்கும் கோபமும் கொண்டவர்களாக சங்கத் தமிழர்கள் திகழ்ந்தனர். அதே போலவே போர் நிகழ்த்துவதற்குச் சரியான நேரத்தையும், அறிவியல் பார்வை கொண்டுக் கணிக்கும் ஆற்றலையும் சங்கத் தமிழர்கள் பெற்றிருந்தனர். இவற்றில் அறிவியல் நுட்பமும், தொழில் நுட்பமும், மருத்துவமும், தகவல் பரிமாற்றங்களும் சங்கத் தொகை நூல்களாகப் போற்றப்படும் எட்டுத்தொகையும், பத்துப்பாட்டும் குறிப்பிடுகின்றன. குறிப்பாகப் பண்டைத் தமிழகத்தின் அரசியல் வரலாற்றையும், சமூக வரலாற்றையும் அரிய கருவூலமாக தொகை நூல்கள் விளங்குகின்றன. பண்டைய காலத்தில் வாழ்ந்த பேரரசர்கள், சிற்றரசர்கள், வீரர்கள், வீர விளையாட்டுகள், போர் வெறியின் உச்சங்கள், வீரவழிபாட்டு மரபுகள், படை வகுப்புகள், எடுத்தியம்பும் நோக்கமாக இக்கட்டுரை அமைகின்றது.

**வீர மரபு**

தமிழகத்தின் வீரப்புகழ் வெறும் புனைந்துரை மற்றும் மிகையுரை என்று போற்றப்படும் வரலாற்றுச் செய்திகளைக் கவிஞர் பாரதியார் இப்பாடலின் மூலம் குறிப்பிடுகிறார்.

**"விண்ணை இடிக்கும் தலைஇமயம் - எனும்**
**வெற்பை அடக்கும் திறலுடையார் - சமர்**
**பண்ணிக் கலிங்கத்து இருள் கெடுத்தார் - தமிழ் பார்த்திபர்**
**நின்ற தமிழ்நாடு"**[1]

என்ற அடிகள் பண்டைய தமிழர்களின் மாபெரும் வெற்றியை வில், கயல், புலி ஆகிய முத்தமிழ்க் கொடிகளையும் இமய மலையுச்சியில் பொறித்தனர். நில உலகத்தின் கூரை எனப்படும் இமயம் தமிழ் வீரப் புகழை வானகத்துக்கு எடுத்துரைத்தது. அத்துடன் இமயத்தையடுத்த வடநாடாகிய கங்கை நாட்டையும், இடை நாடுகளாகிய வங்கத்தையும், கலிங்கத்தையும் மூவேந்தர்கள் போர் நிகழ்த்தி வென்று அவர்களின் வீரச்சிறப்புகளைப் பற்றி பரணி இலக்கியம் நமக்கு உணர்த்துகிறது.

**போர்க்கள வீரம்**

உலகிலேயே போரில் கூட அறம் கண்ட மக்கள் தமிழர்களே! அது மட்டும் அல்லாமல் புறங்காட்டுபவனை கூட கொல்லாது நாகரீகம் பேணிய சமுதாயம் தமிழ்ச் சமுதாயமேயாகும் என்பதை பாண்டியன் பல்யாகசாலை முதுகுடுமிப் பெருவழுதியை நெட்டிமையார் பாடிய பாடலின் மூலம் நம்மால் அறிய முடிகிறது. இதனை,

**"ஆவும், ஆன் இயற் பார்ப்பன மாக்களும்,**
**பெண்டிரும், பிணியுடையீரும், பேணித்**
**தென்புலம் வாழ்நர்க்கு அருங்கடன் இறுக்கும்**
**எம்கோ, வாழிய, குடுமி – நம்கோச்**
**செந்நீர் விழவின் நெடியோன்"** [2] (புறம்:9)

என்ற பாடல் வரிகளின் சங்க காலப் பெண்டிரும் வீரம் பெற்றிருந்தனர். கணவன் போருக்கு போகும் போது தன்னுடைய சகோதரனையும், மகனையும் போருக்கு பெண்கள் அனுப்பி வைத்தனர். பசு, பார்ப்பனர், பெண்டிர், பணியாளர், மூத்தோர், குழந்தைகள், பிள்ளைப்பேறில்லாதோர் இவர்களைப் பாதுகாத்துப் படைவீரர்களுடன் மட்டுமே போர் புரியும் அறம் இருந்திருப்பதைக் காண முடிகிறது.

**படைக் கருவிகளின் பெருமை**

சங்கத் தமிழ்வேந்தர்களாகிய தொண்டைமானும், அதியமானும் பகைமைக் கொண்டிருந்தனர். தொண்டைமானின் செருக்கை அறிந்த அதியமான் தன் படைவலிமையும், தொண்டைமான் தோல்வி அடைவது உறுதி என்பதையும் அறிவுறுத்துமாறு ஔவையாரைத் தூது அனுப்புவதாக இப்பாடல் அமைந்துள்ளது.

**"கண் திரள் நோன்காழ் திருத்தி நெய் அணிந்து**
**கடியுடை வியன்நக ரவ்வே; அவ்வே**
**பகைவர்க் குத்திக் கோடுநுதி சிதைந்து**
**கொல்துறைக் குற்றில மாதோ என்றும்"…..**[3] **(புறம்95:2-5)**

தொண்டைமான் தன் படைக் கருவிகளைப் பெருமையோடு காட்டுவதாக புறநானூற்றுப் பாடலின் மூலம் நம்மால் அறிய முடிகிறது.

**படை வகுப்பு**

இன்றைய காலத்தில் பட்டாள முறையில் அமைந்த படைகளும் முற்காலத்திலும் உண்டு.

1. **விற்படை**
2. **வேற் படை**
3. **மற்படை**
4. **வாட் படை**

முதலிய போர்ப் படைகளைக் கொண்டிருந்தனர் என்பதை அறியலாம்.

**அறிவியல் செய்திகள்**

சங்கப் புலவர்கள் மரங்கள், செடிகள், கொடிகள் விலங்குகள் பறவைகள் ஆகியவற்றின் உயிர்களைக் கண்டு அவைகளின் உருவம், தோற்றம், குணம், செயல்கள் ஆகிய பல செய்திகளையும், இலக்கிய அறிவியலையும் ஆராய்ந்து கூறியுள்ளனர். குறிப்பாக யானைப்படைகளைக் கொண்டு போர் புரியம் மரபு அக்காலத்தில் இருந்தன எனப் புலனாகிறது. அதே போல் யானை தன் கொம்பால் புலியைக் கொன்று பின்னர் தன் கொம்பையும், உடலையும் கழுவுவதை அறிஞர்கள் அறிந்துள்ளனர். இது யானையின் செயல் என்பதனை,

**“உழுவையொடு உழந்த உயங்கு நடை ஒருத்தல்**
**நெடுவகிர் விழுப்புண் கழா அக் கங்குல்”[4]** **(அகம்: 308)**

**“இரும்புலி தொலைத்த பெருங்கை வேழத்துப்**
**பலவுநாறு புகர்நுதல் கழூவக் கங்குல்**
**அருவி தந்த அணங்குடை நெடுங்கோட்டு”[5]** **(அகம்:272)**

என்னும் வரிகளில் வரும் அரிய செய்திகளை அகநானூற்றின் வழி அறியலாம்.

**வீர விளையாட்டு**

தமிழர் வீர விளையாட்டில் என்றும் விருப்பமுடையவராகத் திகழ்தனர். வேட்டையாடல், மல்லாடல், ஏறுதழுவுதல் முதலிய விளையாட்டுகள் மிகப் பழமை வாய்ந்தன. வில்லாளராகிய பெருநில மன்னரும், குறுநில மன்னரும் பொழுதுபோக்காக வேட்டையாடினர். இதில் மன்னரின் வீரம் சிறப்பித்துக் குறிப்பிடுகிறது. சோழ மன்னன் காவிரிக்கரையிலும், பாலாற்றங்கரையிலும், பரந்து நின்ற காடுகளிலும் வேட்டையாடப் புறப்பட்டதாக கலிங்கத்துப் பரணி அதன் சிறப்புகளைக் கூறுகிறது.

**போரிடும் காலமும் நேரமும்**

போரிடுவதற்கு என்று காலம் நேரம் பார்த்து பண்டைத்தமிழ் போர் செய்தனர். நல்ல நாள், நல்ல நேரம் பார்த்து போரில் ஈடுபட்டனர். முல்லைப்பாட்டில் போருக்காகச் செல்லும் போது நாழிகை கணக்கன் என்பவனை உடன் அழைத்துச் சென்றுள்ளான் மன்னன். ஏனெனில் அவன் தன் போர் செய்வதற்குரிய காலம், நேரம் குறித்து தருவதாகும். அது மட்டுமின்றி போர் பகலில் மட்டுமே நடைபெறும். இரவில் நடைபெறாது. அதாவது சூரியன் உதயமாகும் போது போர் தொடங்கி அஸ்தமிக்கும் போது போர் நிறுத்தப்படவேண்டும். போருக்காகச் செல்லும் போது பகலில் போரிட்டுவிட்டு இரவில் நாட்டின் எல்லையில் பாசறை அமைத்துத் தங்குவது உண்டு. பின்பு மறுநாள் போர் புரிந்ததாக சங்கப் பாடல்கள் குறிப்பிடுகின்றன. இதனை,

**“கடல் கிளர்ந்தன்ன கட்டூர் நாப்பண்**

**வெந்து வாய் மடிந்து வேர் தலைப்பெயரி,[6] (புறம்295:1-2)**

**“கண்கூடு இறுத்த கடல் மருள் பாசாறை”[7] (புறம்294:2)**

என்ற அடிகள் வழி அறியலாம். இன்றைய காலத்தில் போர் தொடுக்கும் நாடுகள் இரவு, பகல் என்று பாராமல் தொடர்ந்து போரிட்டுக் கொண்டி இருக்கின்றன. சான்றாக இன்றைய காலத்தில் ரஷ்யா, உக்ரையன், சூடான் ஆகிய உள்நாட்டுப் போர்களைக் குறிப்பிடலாம்.

**போர் வெறியின் உச்சம்**

போரில் எதிரில் நின்றவரைக் கொல்வது வீரம் என்றால் அவனை அழித்த பின் போருக்கே வராத அம்மன்னனின் உறவினரையும், குழந்தையையும் தேடிப்பிடித்துக் கொல்வது இவற்றையெல்லாம் போர்வெறியின் உச்சத்தைக் குறிப்பிடுகின்றன. சோழன் குளமுற்றத்துத் துஞ்சிய கிள்ளிவளவன் தன் பகைவனான மலையமானைப் போரில் வென்ற பின் அவனின் சிறுபிள்ளைகளைக் கொணர்ந்து யானையின் காலில் போட்டுக் கொல்லத் துணிந்த அவனின் வெறிச்செயலைக் கண்டு கோவூர்கிழார் பாடியதாக வரும் பாடல் இது.

**“களிறு கண் டழூஉ மழாஅன் மறந்த**
**புன்றலைச் சிறா அர் மன்றுமருண்டு நோக்கி**
**விருந்திற் புன்கணோ வுடையர்**
**கேட்டனை யாயினீ வேட்டது செய்ம்மே” [8] (புறம்:46)**

மேற்சுட்டிய நீயோ புறாவின் பொருட்டுத் தன்னையே வழங்கிய சோழன் மரபில் பிறந்துள்ளாய். இவர்களோ புலவர்கட்குப் பெருங்கொடை நல்கி வாழும் மலையமான் மரபினர்.

**அரசியலில் அறச்சிந்தனை**

மன்னர்கள் போர் நிகழ்த்த முக்கிய காரணமே பேராசையாகும். பழங்காலத்தில் மண்ணாசை, பொன்னாசை, பெண்ணாசை இவற்றின் காரணமாகவே போர் நிகழ்ந்தது. அம்மன்னர்கள் ஒரு நாட்டின் தலைவனாகவும், அரசியலின் தலைவனாகவும், ஓர் தனியிடத்தை பிடிப்பவனாகவும் திகழ்ந்திருந்தன. குறிப்பாக சோழ நாட்டில் அரசுரிமைப் போர்கள் நடைபெற்றன. சேட் சென்னி என்ற நலங்கிள்ளிக்கும், நெடுங்கிள்ளிக்கும் அரசுரிமைப் போராட்டம் நீண்ட நாள் நீடித்து வந்ததாகவும், நெடுங்கிள்ளி ஆவூர்க் கோட்டைக்குள்ளிருந்து போர் செய்ததாகவும், நலங்கிள்ளியின் தம்பியான மாவளத்தான் அக்கோட்டையை முற்றுகையிட்டதாகவும் பின்வரும் பாடல் குறிப்பிடுகிறது. இதனை,

**“அறவை ஆயின் நினது எனத் திறத்தல்**
**மறவை ஆயின் போரொடு திறத்தல்**
**அறவையும் மறவையும் அல்லை ஆகத்**
**திறவாது அடைத்த திண்ணிலைக் கதவின்**
**நீள்மதில் ஒரு சிறை ஒடுங்குதல்”[9] (புறம்44:11-15)**

மேற்சுட்டியப் பாடலில், கோவூர்கிழார் என்பவர் நெடுங்கிள்ளியிடம் சென்று நீ அறவழியில் வாழ விரும்பினால் நலங்கிள்ளியுக்கு உன் நாட்டைக் கொடு, மறவழியில் வாழ விரும்பினால் நலங்கிள்ளியுடன் போர் செய் என்று அறிவுரை உரைப்பதாக அமைந்துள்ளது.





**முடிவுரை**

சங்கத் தமிழரின் வாழ்வியல் பற்றியும், அறிவு நிலைப்பற்றியும், அரசியல், சமுதாயம், நாகரிகம், நல்லறம், போரறம், படை வகுப்பும், அறிவியலும் காலந்தோறும் மக்களுக்கு ஊட்டியே வந்துள்ளன. அதே போல் தமிழர்களிடையே வீரமும், ஈரமும் நிறைந்திருப்பதை நம்மால் அறிய முடிகிறது.

கோட்டையும், நாட்டையும் கைப்பற்றும் எண்ணமும், ஆசையும் மன்னர்களிடையே மிகுந்து உள்ளதை இச்செய்தி கூறுகிறது. சங்கத் தமிழர்கள் நிகழ்த்திய போர்களிலிருந்தும், அவற்றில் கடைப்பிடிக்கப்பட்ட அணுகு முறைகளிலிருந்தும், உத்திகளிலிருந்தும் இன்றைய நடைமுறையில் ஒவ்வொருவரும் கற்றுக் கொண்டு வாழ்வில் அறத்தோடு வாழ்வது பற்றி இக்கட்டுரை அமைகிறது.

**துணைநூற் பட்டியல்**


1. அப்பாத்துரை. கா, தென்னாட்டுப் போர்க்களங்கள், பதிப்பகம் மெய்யப்பன் தமிழாய்வகம், சிதம்பரம் 608001, முதல் பதிப்பு, 2001.
2. அருணா.அ, புறநானூற்று பாடலில் போர்த்திறன், பன்னாட்டுத் தமிழியல் ஆய்விதழ், தொகுதி 1, மலர் 3, ஜனவரி 2019.
3. சங்கரேஸ்வரி. மா, பண்டைத் தமிழர்களின் போர் மரபுகளும் நெறிகளும், பிரணவ் தமிழியல் ஆய்விதழ், மார்ச் 2003.
4. சாமி பி.எல், சங்க இலக்கியத்தில் அறிவியற் கலை, சேகர் பதிப்பகம், சென்னை – 78, முதல் பதிப்பு, 1991.
5. சுவாதி. பெ, சங்க இலக்கிய போர்ப் பதிவுகள், தமிழ்மொழி மற்றும் இலக்கிய பன்னாட்டு ஆய்விதழ், தொகுதி 1, ஜூலை 2018.
6. சேதுப்பிள்ளை ரா.பி, தமிழர் வீரம், பதிப்பகம் பழனியப்பா பிரதர்ஸ் சென்னை 14, பன்னிரண்டாம் பதிப்பு, 2007.
7. பிரபாகரன். இர, புறநானூறு மூலமும் எளிய உரையும் பகுதி 1, பதிப்பகம் காவ்யா, சென்னை – 24, 2011.
8. பிள்ளை. கே.கே, தமிழக வரலாறு மக்களும் பண்பாடும், உலகத் தமிழ் வளர்ச்சி நிறுவனம்,சென்னை – 113, முதல் பதிப்பு, 2009.